Registered as a Newspaper in Ceylon ✳ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

[illegible] மலர் 10
போன் [illegible] National Tamil Daily இதழ் 167
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் [illegible] ஆடி 12 ஜூலை 1 சனிக்கிழமை (27-7-6?)




# வல்வை கொலை வழக்கு எதிரி பத்திராஜு விடுதலை

## அட்டர்ணி ஜெனரல் முடிவு

நல்லூர், சனி
வல்வெட்டித்துறை இளைஞன் கொலை வழக்கில் எதிரியான எஸ். சி பத்திராஜு நேற்று விடுதலை செய்யப்பட்டார். அட்டர்ணி ஜெனரலின் உத்தரவை தொடர்ந்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கே. வின்னராசா எதிரியை விடுதலை செய்தார்.

1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் திகதி வல்வெட்டித்துறையில் இளைஞரான சிவஞானசுந்தரத்தை சுட்டுக் கொலை செய்ததாக, இன்ஸ்பெக்டர் பத்திராஜு மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. கே. வின்னராசா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டபின், சுப்பிறிம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

கீழ் கோர்ட்டில் எதிரி சார்பில் வழக்கறிஞர் ஜோர்ஜ் சுந்தப்பு, புறக்டர் ஜெ பாலகிருஷ்ணன் சார்பில் ஆஜரானார். வழக்காளி தரப்பில் வழக்கறிஞர் ஜி. ஜி. பொன்னம்பலம், அட்வகேட் எம். மேதிலால் நேருவின் உதவியுடனும், புறக்டர் என். நடராசாவின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

மத்திய வங்கி தீ விபத்து

## அதிகசேதங்கள் ஏற்படவில்லை

### வங்கிகவர்னர் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி
"கொழும்பிலுள்ள மத்திய வங்கி தலைமை அலுவலகத்தில் நடந்த தீ விபத்தினால் கூடுதலான சேதம் எதுவும் ஏற்படவில்லை. ரூபாய் நோட்டுக்கள் எதுவும் எரியவில்லை. சில 'செக்'குகள் மட்டுமே எரிந்தன.

மத்திய வங்கி கவர்னர் திரு. வில்லியம் தென்னக்கோன் தீவிபத்தினால் ஏற்பட்ட சேதம் பற்றி விபரிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தென்னக்கோன் மேலும் கூறியதாவது: தீப்பிடித்த பகுதியில் ரூபாய் நோட்டுக்கள் இருக்கவில்லை. சில செக்குகளும் தஸ்தாவேஜுகளும் மட்டுமே அங்கு இருந்தன. அங்குள்ள உத்தியோகத்தர்கள் அவற்றைப் பாதுகாத்துவிட்டனர். தீப்பிடித்த பகுதியிலுள்ள தளபாடங்கள் சேதமடைந்துள்ளன.

தீப்பிடித்த காரணம்பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க அரசாங்க ரசாயன பரிசோதகரும், அரசாங்க மின்சார இலாகாவின் பிரதம என்ஜினியரும் பொலிஸாரால் அழைக்கப்பட்டுள்ளனர்.

பத்மினி கொலை வழக்கு

## டாக்டர் குலரத்னு மீதான குற்றச்சாட்டில் மாற்றம்

### கொலைக் குற்றம் பணிப்பெண் மீது

கொழும்பு, சனி
பத்மினி குலரத்னு கொலை வழக்கின் முதல் எதிரியான டாக்டர் குலரத்னு மீதான குற்றச்சாட்டு இன்று திருத்தம் செய்யப்பட்டு அவர் கொலைக்கு உடந்தையாகவும், உதவியாகவும் இருந்தார் என குற்றம் சாட்டப்பட்டது.

வழக்கு பிரதம நீதியரசர் திரு எச். என் ஜி பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் தமது தொகுப்புரையை முடித்துவைக்கையிலே யே இவ்விததிருத்தங்களை சமர்ப்பித்தார்.

திருமதி லோராகுணரத்னு [பத்மினியின் மாமியார்] கொலைசெய்ய சதிசெய்ததாகவும் சோபியா என்ற வேலைக்காரப்பெண் கொலை செய்வதற்கு உடந்தையாக இருந்தாரென்றும் சோபியா கொலை புரிந்ததாகவும் குற்றச் சாட்டுக்கள் இப்போது முடிக்குரிய வழக்கறிஞரால் திருத்தப்பட்டுள்ளன. இவர்கள் மூவரும் கொலைசெய்ய சதிசெய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

டாக்டர் குலரத்னுவைத் தவிர மற்றவர்களெல்லாம் திருமதி குலரத்னுவுடன் அன்புகொண்டிருந்தார்களெனத் தெரிவித்த முடிக்குரிய வழக்கறிஞர் இக்கொலையால் வேறு எவரும் லாபமடைந்திருக்க முடியாது என்றும் 12 வயதுடைய சிறுமியான அச்சினி [டாக்டர் குலரத்னுவின் புதல்வி] பொய்சொல்லியிருக்கமுடியாது என்றும் தமது வாதத்தின்போது குறிப்பிட்டார்.

## சத்தியாக்கிரகம், சட்டம் புரட்சி யாவும் பயனில்லை

### பகிஷ்காரம் தான் சரியானவழி என்கிறார் சமசமாஜ பிரமுகர்

உடுப்பிட்டி, வெள்ளி
"ஆலயப்பிரவேசம் சம்பந்தமாகச் சிறுபான்மைத் தமிழர்கள் கையாண்ட நான்கு வழிகளும் தோல்வியடைந்து விட்டன. மனமாற்ற மூலமோ, சத்தியாக்கிரகம் மூலமோ, புரட்சி மூலமோ, சட்ட மூலமோ ஆலயப்பிரவேசம் செய்ய முயற்சிப்பதால் எவ்வித பலனுமில்லை. ஆலயப் பிரவேச முயற்சிக்கு இன்னும் ஒரேயொரு வழிதான் உள்ளது. அதுதான் பகிஷ்கார இயக்கம். இதன் மூலம் ஓரளவாவது வெற்றிகிடைக்கும்"

இவ்வாறு வடபிரதேச சமசமாஜ வாலிபர் சம்மேளனத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"உயர் வகுப்பினரின் மனமாற்றத்தினால் சிறிது பலனுண்டெனினும், அதற்கு உறுதுணையாகச் சட்டம் பெலமுள்ளதாக இருக்க வேண்டும். இன்றைய அரசாங்கத்தின்சட்டம் ஆலயப் பிரவேசத்திற்கு உதவிபுரிய மாட்டாது. இச்சட்டத்தை பலப்படுத்தாது செய்ய எந்தவொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் முயற்சி [illegible]

வடபகுதியில் [illegible] அரசியல் பின்னணியில்

(6 பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

எமிகள் ஸ்தாபனத்தில் வேலை செய்து வந்த K. பாலசிங்கம் என்ற K. பாலசுப்ரமணியம் என்பவர் 20-7-68-ம் திகதி அன்று எங்கள் ஸ்தாபனத்தில் இருந்து விலகிவிட்டார் என்று இத்தால் தெரியப்படுத்துகிறோம். இருஷ்ணா கிரேஸ் 8/8 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

980

## யாழ். நகரில் சேரி ஒழிப்பு

### அரசாங்கம் லட்ச ரூபாய் உதவி

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாண நகரில் சேரிகளை ஒழிப்பதற்கென யாழ். மாநகர சபைக்கு அரசாங்கம் ஒரு லக்ஷம் ரூபாய் வழங்கியிருக்கிறது. சேரி ஒழிப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (ந. நி)

## 21பேர்மாண்டனர்

ஹொங்கொங், ஜூலை 26
ஹொங்கொங்கில் சளி ஜூரம் காரணமாக 21பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் லட்சக்கணக்கானோர் [illegible] இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

## செனட்டில் 'மாவை' ஆலய பிரவேச பிரச்னை

கொழும்பு, சனி
மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவில் ஆலயப்பிரவேச விவகாரம் இன்று செனட் சபையில் எதிரொலித்தது லங்கா சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த செனட்டர் திரு. ரெஜி பெரேரா பேசுகையில், ஹரிஜனர்கள் ஆலயத்துக்குள் செல்வதற்கு உரிமையிருக்கிறதென்றும், அவர்கள் சகல மக்களையும் போன்று ஆலயத்துக்குள் செல்ல அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்று நம்புவதாகவும் அவர் சொன்னார்.

செனட்டர் திரு. விஜயமானே பேசுகையில், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், பொலிஸ் ஆகியவற்றின் பலத்த கட்டுப்பாட்டுக்குள் மாவிட்டபுரம் ஆலயம் உள்ளதென்றும், ஹரிஜனர்கள் உள்ளே செல்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறினார்.

## பாகிஸ்தான்

### படை பலம் அதிகரிப்பு

புதுடில்லி, ஜூலை 26
பாகிஸ்தான் படைபலம் அதிகரிக்கப் பட்டுள்ளது. அதன் இராணுவத்தின் தரைப்படை வீரர்தொகை இரட்டிப்பாகி விட்டது. யுத்த விமானங்களின் தொகையும் இருமடங்காகி விட்டது. இப்போது கப்பல் படைக்கு பல சப்மரீன்களை சேர்த்து வருகின்றது. என பாரத பாதுகாப்பு மந்திரி திரு. சுவரண்சிங் லோக சபையில் தெரிவித்தார்.

ரஷ்யா பாகிஸ்தானுக்கு ஜீப்புகள், ராணுவலொறிகள் ஹெலிகாப்டர்கள் போன்றவற்றையும் அனுப்பிவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## டிக்கட் எடுப்பது கஷ்டம்

வவுனியா, வெள்ளி
வவுனியா புகையிரத நிலையத்தில் ரயில்வரும் நேரங்களில் டிக்கட் எடுப்பது மிகவும் சிரமமாக இருப்பதாக பிரயாணிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இறைவனை மறவாமல் இருந்தால், நாம் தவறு செய்ய முடியாது. நமக்குள்ளிருந்து அவரே நம்மை வழிநடத்துகிறார் என்ற உணர்வு வந்துவிட்டால், நம் ஆணவம் நீங்கி, நாம் அவரது கருவியாகிவிடுவோம்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

[illegible]
ஆடி மாதம் 12-ந் திகதி
(27-7-68)

## சமாதானமும் சுபீட்சமும்

தமிழ் மொழிக்கோ, தமிழ் மக்களுக்கோ நாம் விரோதியல்லவென்றும் இந்நாட்டில் சகல இனத்தவரும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் வாழ வேண்டுமென்பதே தனது அபிலாஷையென்றும் இலங்கையின் முன்னாள் பிரதமரும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயகா இரத்தினபுரியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார். நுனி நாக்கிலிருந்து வந்த வார்த்தைகளாக இல்லாமல் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வந்த உண்மை வார்த்தைகளாக இவை இருக்க வேண்டும். உண்மையான வார்த்தைகளை திருமதி சிறிமா மட்டுமல்ல அரசியல்வாதிகள் அனைவருமே பேசுவாராக இருந்தால் நமது நாட்டின் இன்றைய பிரச்னைகள் பலவும் மறைந்துவிடும் நாட்டில் அமைதியும் நிலவும்; நாடும் முன்னேறும்.

சகல இனத்தவரும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் வாழ வேண்டுமென்பது தனது விருப்பம் என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் கூறுகிறார். இடதுசாரித் தலைவர்களும், தமிழ்த் தலைவர்களும் இதையே சொல்கின்றனர்.

'சிங்கள மக்கள் கட்சி' என புதிய கட்சி அமைத்துள்ள திரு ஆர். ஜி. சேனநாயகாவும் கூட தேசிய ஐக்கியம்தான் தமது இலட்சியமென்கிறார். சமாதானம், சுபீட்சமும் தேசிய ஐக்கியமும்தான் தங்கள் இலட்சியம் என்று சொல்லும் நமது நாட்டின் தலைவர்கள் இந்த இலட்சியத்தை அடைவதற்கு ஒரே மார்க்கத்தைக் கண்டறிய முடியாதா? அரசியல் ஆட்சிப் போட்டியையும் அடுத்த பொதுத் தேர்தலையும்பற்றிச் சிந்திப்பதைவிடுத்து நாட்டின் அமைதியையும் சுபீட்சத்தையும் தேசிய ஐக்கியத்தையும் மட்டுமே கருத்திற்கொண்டு உழைக்க இவர்கள் முன்வந்தால் நிச்சயம் ஆற்றலுள்ள ஒரே மார்க்கத்தைக் கண்டறிய முடியும்.

சகல மக்களும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் வாழ வேண்டுமென்பதே தமது அபிலாஷை எனக் கூறும் எதிர்க்கட்சித் தலைவரும் இதே விருப்பத்தை தெரிவிக்கும் மற்றும் சில தலைவர்களும் தமிழர்கள் தென்னிந்தியாவுடன் சேர்ந்துவிடுவார்களென்றும் தென்னிந்தியாவுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது தான் தமிழரசுக்கட்சியினரின் நோக்கம் என்றும் கூறிவருவதன் அர்த்தமும் நோக்கமும் என்ன? தென்னிந்தியாவில் தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கு இந்துக்களுக்கு புனிதமான ஸ்தலங்கள் இருக்கின்றன. இதனால் இந்நாட்டிலுள்ள தமிழ் மக்களின் விசுவாசத்தை, தேசாபிமானத்தை சந்தேகக்கண் கொண்டு பார்க்க வேண்டுமா?

வட இந்தியாவிலே பௌத்த ஸ்தலங்கள் இருக்கின்றன. சீனாவிலும் பர்மாவிலும் கம்போடியாவிலும் தாய்லாந்திலும் தென்வியட்நாமிலும், ஜப்பானிலும் பௌத்தர்கள் வாழ்கிறார்கள். தென்வியட்நாம் பௌத்தர்களுக்குத் துன்பம் ஏற்பட்டபோது ஐ.நா வில் இலங்கை அவர்களுக்காகக் குரல் எழுப்பியது. சீனாவுடனும் ஜப்பானுடனும் பர்மாவுடனும் இலங்கைப் பௌத்தர்கள் சேர்ந்துவிடுவார்களென்றோ, தென்வியட்நாமை இலங்கை தன்னுடன் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறதென்றோ யாரும் சந்தேகத்துடன் நோக்கினார்களா? தமிழ் நாட்டில் ஆட்சிபீடத்திலுள்ள தமிழர்களான திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுடனும் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் பேசினால் அது நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகுமா? தேசத் துரோகமாகுமா? சோஷலிஸ்ட் தலைவர்கள் அன்னிய வேறு சோஷலிஸ்ட் நாட்டு தலைவர்கள் வந்தால் இங்குள்ள சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் சந்தித்துப் பேசுவதில்லையா? இவர்கள் அந்நாடுகளுக்குச் சென்று தலைவர்களை சந்திப்பதில்லையா? இப்படிச் சந்திப்பது தேசத் துரோகமா? நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகுமா?

சகல இன மக்களும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் வாழ வேண்டுமானால் தேசிய ஐக்கியம் நிலைபெற வேண்டுமானால் சகல இன மக்களையும் ஒரே கண் கொண்டு சமமாக நடத்த பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் தான் முன்வர வேண்டும்.

## குருபூசை

சுழிபுரம், வெள்ளி

ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனார் குருபூசைத்தினம் இம்மாதம் 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரியில் விமரிசையாகக் கொண்டாடப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அவரது பழையமாணவர்களான எஸ். கதிரவேலு, அ. சின்னையா ஆகிய இருவரும் விழா நடைபெறுவதற்கான ஒழுங்குகளை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

## மந்திரிக்கு தந்தி

யாழ்ப்பாணம், சனி

உடனடியாகச் சம்பள நிர்ணய சபையை யாழ்ப்பாணத்தில் கூட்டி கருட்டுத் தொழிலாளர்களுடைய கூலி உயர்வை சட்டபூர்வமாக்கி பிரகடனம் செய்யும்படி தொழில் மந்திரிக்கும் தொழில் கமிஷனருக்கும் இலங்கை கருட்டுத் தொழிலாளர் சங்கம் தந்தி அனுப்பியுள்ளது.

இன்று வண்ணை ஸ்ரீ தையல்நாயகி அம்மை ரதோற்சவம். அம்பிகை மீது 'அன்புக்கடல்' திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் பாடியுள்ள கீர்த்தனை இது.

# அருள் புரிவாயே அம்பிகை

எடுப்பு

அருள் புரிவாயே அம்பிகைநீயே
ஆதிபராசக்தி அம்மை மனோன்மணி—[அருள்]

தொடுப்பு

இருள்மலமாயா மருளினில் மூழ்கி
இருந்திடாதெனக்கு இபரநிலைமையே- [அருள்]

முடிப்பு

உருகுமடியார் உள்ளம்மகிழ
உவந்தருள்புரி ஸ்ரீ தையல்நாயகி
அருள்நிறைவான திருவளர் வண்ணை
அமர்ந்திடுமம்மா வாலாம்பிகையே—[அருள்]

# இன, மதவேறுபாடற்ற தொண்டே சிறந்தது

### யாழ். உதவி அரசாங்க அதிபர்

புன்னாலைக்கட்டுவன், வெள்.

"இன, மத வேறுபாடற்ற தொண்டே நாட்டின் சிறந்த தொண்டு. இனமத வேறுபாடும், உத்தியோக மோகமும் இன்று பூண்டோடு அழிக்கப்பட வேண்டுமானால் உத்தியோகம் என்ற பட்டாடையைக் களைந்து விவசாயமாகிய உன்னதத் உடையை அணிவதற்கு மாதர்களும், இளைஞர்களும் முன்வரவேண்டும்" என யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு இ. முருகேசம்பிள்ளை ஊரெழு பாரதி அரசாங்க விவசாயக் கழகமும், கலைவாணி மாதர் முன்னேற்றச் சங்கமும் நடாத்திய ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

வலி—கிழக்கு காரியாதிகாரி திரு. வ. சுந்தரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ். மாவட்ட விவசாய அதிபர் திரு கே. என். ஜெயசீலன், திருவாளர்கள் கே. வி. தனேஸ்வரன், எஸ். சின்னத்துரை, எஸ். வீரசிங்கம், எஸ். பத்மராசா, எஸ். தனபாலசிங்கம், எஸ். யோசேப், திருமதி சத்தியதேவி, திருமதி புஷ்பரத்தினம், ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

விவசாயப் பொருட்காட்சியில் வெற்றியீட்டியவர்களுக்கு திரு இ. முருகேசம்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.

அரசாங்கத்தால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட ரூபா 3000 பெறுமதியான விவசாய உபகரணங்கள் திரு. என். ஜெயசீலனால் கழகத் தலைவர் செல்வன் க. சண்முகநாதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

விழா முடிவில் "கைகொடுத்த விவசாயி" என்னும் சமூக நாடகம் நடைபெற்றது.

## 'உங்கள் கைகளை நம்புங்கள்'

பூநகரி, வெள்ளி

'எந்த ஒரு விஷயத்தை சாதிக்க வேண்டுமானாலும் அதற்கு அரசாங்கத்தை நம்பியிராமல் மக்கள் தனித்தனியே சங்கங்களாகவோ கூட்டாகவோ சேர்ந்து அவ் வேலைகளைச் செய்யப்பழகிக் கொள்ளவேண்டும்.'

இவ்வாறு பூநகரி காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்ற பூநகரிப் பகுதி சன சமூக நிலைய கிராம முன்னேற்றச்சங்க கருத்தரங்க மகாநாட்டு முதல்நாள் நிகழ்ச்சியில் தலைமைதாங்கிப் பேசிய மேலதிக அரசாங்க அதிபர் ஜே. எம். சபாரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சன சமூக நிலையங்களிலும் கி. மு. சங்கங்களிலும் உள்ள உத்தியோகத்தர் நேர்மையாயும் விசுவாசமாயும் உழைக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்

அதைத்தொடர்ந்து கிராம முன்னேற்றச் சங்கங்களின் உபஅதிபர் ஏ. பேரினட்பிள்ளை, வடமாநில கி. மு. சங்க மேற்பார்வை அதிகாரி வீ. கே. சுப்பிரமணியம், கி. மு. ச. பயிற்சி நிலைய அதிபர் கே. இராமச்சந்திரன் பூநகரி கி. சபை உறுப்பினர் வை. வல்லிபுரம், மட்டுவில்நாடு மாதர் சங்கத் தலைவி ந. சரஸ்வதி ஆகியோரும் பேசினர். பிற்பகல் குடும்பக்கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் மனோகரன் 'குடும்பநலனும் கட்டுப்பாடும்' என்னும் விஷயம்பற்றி சொற்பொழிவாற்றினர்.

## குழந்தை தப்பியது தாய் மரணம்

சுழிபுரம், வெள்ளி

பண்ணாகத்தைச் சேர்ந்த ஒரு பெண் இல்லத்தில் குழந்தையைப் பெற்றெடுத்த சிலமணி நேரத்தில் மரணமானார். நஞ்சுக்கொடி வெளிவராததாலேயே இவர் மரணமானதாகத் தெரியவருகிறது. இவர் பெற்றெடுத்த பெண் குழந்தை உயிருடனிருக்கிறது. இப்பெண்ணுக்கு உரிய நேரத்தில் உடன் சிகிச்சை அளிக்கப்படாமையே இவர் மரணத்துக்குக் காரணம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

என்றாலும் இவ்விஷயத்தில் சைவ சமூகம் இனி அசமந்தமாகவோ, பிடிவாதமாகவோ இல்லாமல், அன்பு வழியிலே இதற்கு நல்ல தோர் தீர்வு காணும்படி எல்லாம் வல்ல முருகன் வழி செய்வரென்றே நம்பிக்கையுடன் பிரார்த்திக்கிறோம்.

ஃ ஃ ஃ

அரவாடும் வல்வெஞ்சாக்
கரியானைக் கரவாரூபாக்
கிரவாடும் பெருமானை
விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ
அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை
என் மனத்தே வைத்தேனே

—அப்பர் சுவாமிகள்

# ஐயாறன் எழுதுகிறது

ஈழநாடு காரியாலயத்தில் குண்டு விழுந்ததா? சொழும்புப் பேப்பரெல்லாம் ஏதேதோ எழுதியுள்ளனவே! உண்மைதானா? நீங்கள் ஏன் ஒரு வார்த்தையும் கூறவில்லை என்று சில அன்பர்கள் கேட்கின்றனர்.

சென்ற புதன்கிழமை இரவு சுமார் இரண்டரை மணியிருக்கும். திடீரென்று ஏதோ வேட்டுச் சத்தம் கேட்டது அடுத்து மற்றொரு சத்தம். தூக்கம் கலைந்தது, ஏதோ ஊர்வலத்தில் இவ்விதம் வெடிப்பதாயும், பொதுமக்களின் நன்மையைக் கருதி, இவ்விதம் செய்யாமல் தடுக்கவேண்டுமென்றும் ஏதேதோ நினைத்துக்கொண்டு மீண்டும் படுத்துவிட்டேன்.

சற்று நேரம் கழிந்து, ஈழநாடு காரியாலய இரவுப் பணியாளர்கள் சிலர் வந்து, காரியாலயத்தின் மீது யாரோ இரு கைக்குண்டுகள் வீசியுள்ளதாயும், நல்லவேளையாக எவ்வித சேதமுமில்லையென்றும், ஒருவருக்கு மட்டும் அற்ப காயமென்றும் தெரிவித்தனர். சாதாரணமாக அங்கு நாலைந்துபேர் படுப்பது வழக்கம் அன்று அங்கு யாரும் தெய்வாதீனமாகப் படுக்காததால், சேதம் எதுவுமில்லை. யோகர்சுவாமிகளின் அபூர்வமான சித்திரம் காரியாலயத்தைக் கண்காணிக்கிறது. அதன் கண்ணாடி மட்டும் சற்றே உடைந்திருந்தது.

இதைக் கேட்டதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஈழநாடு' யாருக்கு என்ன குற்றஞ்செய்தது? ஏன் இப்படிச் சிலர், அன்பற்ற காரியத்தைச் செய்யவேண்டும்? தவறைச் சுட்டிக்காட்டினால் உடன் திருத்திக்கொள்ளுகிறோம். கொழும்பு முதலிய இடங்களிலுள்ள 'வெடிகுண்டு' நாகரிகம் யாழ்ப்பாணத்துக்கும் வந்துவிட்டதா? யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' வேண்டாமா? என்று பலபல யோசனைகள்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்ற வாக்கின்படி எல்லாரும் இன்பமாக வாழவேண்டும் என்பதைத் தவிர 'ஈழநாடு'க்கு வேறு எவ்விதமான விருப்பு வெறுப்புகளோ, கட்சிச் சார்புகளோ எதுவுமில்லை.

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசத்தை நாம் ஆதரித்துவருவதால் அங்கு சிலருக்குக் கோபமென்றும், அவர்கள் தான் இப்படிச் செய்திருக்கவேண்டும் என்றும் ஒரு தாய் ஆத்திரப்பட்டுச் சொல்லி இச்செயலைக் கண்டித்தார். ஆனால் அவர்களில் யாரும் அப்படிச் செய்திருப்பார் என்று தோன்றவில்லை. எல்லாப் பத்திரிகைகளும் தான் ஆலயப் பிரவேசத்தை ஆதரிக்கின்றன. அன்பு வழியிலே அமைதியாக இதைச் செய்ய வேண்டுமென்றே கூறி வருகிறோம்.

பின்னர் சிந்தனையிலும் அன்று அதிகாலை வெடிகுண்டு வீசப்பட்டுச் சிலர் காயமடைந்ததைக் கேட்டதும், இதை மாவிட்டபுரம் பக்தர்கள் யாரும் செய்திருக்கமுடியாதென்றும் ஆத்திரத்தில் தான் வேறு சிலர் இப்படிச் செய்திருக்கவேண்டுமென்றும் தோன்றுகின்றது. இதற்கு யார் காரணமாயினும்சரி, பலாத்காரம் இவ்வித சமூக, சீர்திருத்த விஷயங்களில் நன்மைக்குப் பதில் அதிக தீமையே செய்யும்.

(4-ம் கலமியாரிக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் கடும் கண்டனத்துக்காளாகிய செக். ஜெனரல் பதவி மாற்றம்

## உள்விவகார, இராணுவ இலாகாக்களில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன

## ரஷ்யாவை ஆதங்கப்படுத்த செக். முயற்சி?

பிராக், ஜூலை 26

**வார்ஸோ இராணுவ உடன்படிக்கையைத் திருத்தியமைக்கவேண்டுமென்றும், செக்கோஸ்லாவாக்கியாவிலிருந்து ரஷ்யத் துருப்புகள் வெளியேறுவதில் ஏற்பட்ட தாமதத்தைக் கண்டித்தும், கருத்து வெளியிட்டிருந்த செக். ஜெனரல் ஒருவர் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் ரஷ்யாவின் கண்டனத்துக்குப் பெரிதும் ஆளாகியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி, செக். உள்விவகார, பாதுகாப்பு இலாகாக்களில் 13 உயர்தர அதிகாரிகள் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. நேற்று செக். தலைவர் டுபெக்கின் தலைமையில் நடைபெற்ற செக். கம்யூனிஸ்ட் தலைமைப்பீடத்தின் கூட்டமொன்றின் பின்னரே இந்தப் பதவி மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

செக்கோஸ்லோவாக்கியாவுக்கு ரஷ்யா அனுப்பிய இரகசிய குறிப்பொன்றில் இந்த பதவி மாற்றங்களை அது கோரியிருந்ததாகக் கூறப்படுகிறது. செக் தலைவர்களும், ரஷ்யத் தலைவர்களும் சந்தித்துப் பேசவிருக்கும் இந்நேரத்தில், தனது உள்விவகார, இராணுவ இலாகாக்களில் செக்கோஸ்லோவாக்கியா முக்கிய பதவி மாற்றங்களைச் செய்திருப்பது, ரஷ்யாவை ஆதங்கப்படுத்தவேயெனப் பிராக்கில் சில வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

### அடுத்த வாரம் சந்திப்பு

ரஷ்ய-செக் தலைவர்கள், அடுத்த வாரம் சந்தித்துப் பேசுவார்களென இப்போது தெரியவருகிறது. ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு. பிரெஷ்னெவ் தலைமையில் பிராக் சென்றுள்ள ரஷ்ய தூதுகோஷ்டி, செக். கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகளைச் சந்தித்து இரு நாட்டு உயர் தலைவர்களினதும் கூட்டமொன்றுக்கான பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

ஹிரோஷிமா

### அணுகுண்டுக்கு இரையானவர்கள்

டோக்கியோ, ஜூலை 26

1945 ஆகஸ்ட் 6-ந் திகதி ஹிரோஷிமா மீது ஐக்கிய அமெரிக்கா நடத்திய அணுக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மாண்டவர்களின் பெயர்ப் பட்டியலில் மேலும் 38 பேர்களின் நாமங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. யுத்த முடிவில் இவர்கள் காணாமல் போனவர்களாகக் கருதப்பட்டனர். ஹிரோஷிமா செஞ்சிலுவை ஆஸ்பத்திரியின் பழைய தஸ்தாவேஜுகளை ஆராய்ந்ததில் இவர்கள் அணுக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மாண்டவர்களாகும் என்பதை ஹிரோஷிமா நகர அதிகாரிகள் நிறுவியுள்ளனர்.

அணுக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மாண்டவர்களின் பெயர்ப் பட்டியலை அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஜப்பானிய இயக்கம் தயாரித்து வருகிறது. இந்தப் பட்டியல் ஹிரோஷிமாவிலும் நாகஸாக்கியிலும் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான அணுக்குண்டுத் தாக்குதலுக்கான கோர அத்தாட்சியாக அமையும். இந்தப் பட்டியல் 18 தொகுதிகளைக் கொண்டதாகும். இதில் அணுக்குண்டு வெடிப்பால் ஏற்பட்ட கதிர் வீச்சால் பாதிக்கப்பட்டும், பின்னர் நடத்த அணுக்குண்டுப் பரீட்சைகளின் பாதிப்புக்கு இலக்காகியும் இறந்த 68 ஆயிரம் பேர்களின் பெயர்களும் இடம்பெறுகின்றன.

ஹிரோஷிமாவிலும் நாகஸாக்கியிலும் அமெரிக்க அணுக்குண்டு போட்டதன் பின் விளைவுகளால் பீடிக்கப்பட்ட 300 ஆயிரம் பேர்கள் ஜப்பானிலிருப்பதாக உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

### பௌத்தமதம் பற்றிய கருத்தரங்கு

மினசோட்டா, ஜூலை 26

இங்குள்ள கார்ல்டன் கல்லூரியில் இம்மாதம் 28ம் திகதியன்று பௌத்தமதம் பற்றிய கருத்தரங்கு ஒன்று ஆரம்பமாகிறது. ஒரு மாத காலம் வரை இக்கருத்தரங்கு நடைபெறும். அமெரிக்காவிலுள்ள பல கல்லூரிகளிலும் கடமையாற்றும் பேராசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

ஆசியாவில் உள்ள நாடுகளில் பரவியிருக்கும் வெவ்வேறு மதங்களைப்பற்றிய கலந்துரையாடல்களும் இங்கு நடைபெறவிருக்கின்றன. பேராசிரியர்களும் அறிஞர்களும் ஆசியாவில் கடைப்பிடிக்கும் மதஅனுஷ்டான முறைகளைப் பற்றி அறிந்துகொள்வதற்காகவே இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

12 நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் 21 பேராசிரியர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றி கருத்துரைகளை வழங்குவார்கள். இலங்கையிலுள்ள வித்தியோதயா பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் வால்போல ராகுல இலங்கையிலிருந்து இக்கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காகச் செல்கிறார். இதே பல்கலைக்கழகத்தில் கீழைத்தேய மொழிகள் - இலக்கியங்களுக்கான பீடத்தின் பேராசிரியர் டாக்டர் நிச்சார் சீ பீ சீ அவர்களும் கலந்துகொள்கிறார்.

அமெரிக்காவிலுள்ள பல கல்லூரிகள் ஒருங்குசேர்ந்து இக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருக்கின்றன. கோடைகாலத்தில் நடைபெறும் இத்தகைய மாநாடுகளில் இம்முறை நடைபெறப்போவது முன்னோடியாகும்.

### ஜப்பானில் நிஜலிங்கப்பா

டோக்கியோ, ஜூலை 26

தற்போது ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. நிஜலிங்கப்பா நேற்று இங்கு ஜப்பானியப் பிரதமர் திரு. ஸாற்றோவையும் மற்றும் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார்.

பிரதமர் திரு. ஸற்றோவுடன் திரு. நிஜலிங்கப்பா சுமார் ஒருமணி நேரம் பேசினார். இந்திய—ஜப்பானிய உறவுகள் இந்தியாவின் அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் பரஸ்பர அக்கறையுள்ள விஷயங்கள் பற்றி இரு தலைவர்களும் பேசியதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

திரு. நிஜலிங்கப்பா பல கூட்டங்களில் பேசினார். ஒரு கூட்டத்தில் பாகிஸ்தானுக்கு ரஷ்ய ஆயுதங்கள் விற்பனை செய்யப்படவிருக்கும் விவகாரம்பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது அது இந்திய உபகண்டத்தில் பதற்ற நிலைமையைத் தோற்றுவிக்கும் என்றும், ஆனாலும் அதுபற்றி இந்தியா அளவுக்கு மீறிய கவலை எதுவும் கொண்டிருக்கவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இரஸாயனத் தொழிற்சாலையொன்றை அமைத்துதவுமாறு ஜப்பானியப் பிரதமரிடம் திரு நிஜலிங்கப்பா கேட்டுக்கொண்டதாகவும், திரு. நிஜலிங்கப்பாவின் கோரிக்கையைத் தாம் அவசியம் பரிசீலனை செய்வதாக உறுதியளித்ததாகவும் ஜப்பானிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### எகிப்துக்கு வாழ்த்துக்கள்

கெய்ரோ, ஜூலை 26

1952ல் நடந்தேறிய எகிப்திய புரட்சியின் 16 வது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி சோவியத் பிரதமர் திரு. அலெக்ஸி கோஸிஜின் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

"இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக ஐக்கிய அரபுக் குடியரசு மக்களும் இதர அரபு நாடுகளின் மக்களும் நடத்துகின்ற வீரமிகு போராட்டத்தை சோவியத் மக்கள் உளர்வாகப் போற்றுகின்றனர். இந்தப் போராட்டத்திற்கு சோவியத் யூனியன் ஆதரவு தொடர்ந்தும் வழங்கும்" என அவர் கூறியிருக்கிறது.

### ரஷ்ய - மேற்கத்திய எல்லையில் விமான எதிர்ப்புப் பயிற்சி

மாஸ்கோ, ஜூலை 26

பேச்சுவார்த்தைகளுக்கான ஆயத்தங்கள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறம் ரஷ்யாவில், செக்கோஸ்லாவாக்கிய எல்லையுட்பட, ரஷ்யாவின் மேற்கத்திய எல்லை நெடுகவும், ரஷ்ய இராணுவம் போர் ஒத்திகைப் பயிற்சிகளைப் பெருமளவில் செய்து வருகின்றது. நேற்று விமான எதிர்ப்புப் போர்ப் பயிற்சிகளும் நடைபெற்றன.

ரஷ்யாவின் மேற்கு எல்லையில் நடைபெறும் இப்போர் பயிற்சிகள் செக்கோஸ்லாவாக்கிய மீது நெருக்கம் பிரயோகிப்பதற்கு மட்டுமன்றி, மேற்கு நாடுகளுக்கும் ஓர் எச்சரிக்கையாக விளங்கும் வகையில் அமைந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

### ரஷ்ய, செக். தூதரகங்களுக்கு பிரிட்டிஷ் எம்.பி.க்கள் கடிதம்

லண்டன், ஜூலை 26

லண்டனில் ஆளும்கட்சியான பிரிட்டிஷ் தொழிற்கட்சியைச் சேர்ந்த 50 எம். பி.க்கள், ரஷ்யத் தூதரகத்துக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில், சோஷலிஸத்துக்கான செக்கோஸ்லாவாக்கியாவின் தனித்துவப் பாதையில் அதன் அண்டைய நாடுகள் குறுக்கிடாதிருக்குமெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ளனர். அதே 50 எம். பி.கள் லண்டனிலுள்ள செக். தூதரகத்துக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில், அந்நாடு தனது சோஷலிஸத் தனித்துவப் பாதையில் சென்று வெற்றி காணுமென நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

செக்கோஸ்லாவாக்கியாவின் சோஷலிஸ இலக்கத்துக்கான எதிர்ப்பு, சகல வரம்புகளையும் மீறிவிட்டதாக யூகோஸ்லாவியப் பத்திரிகை ஒன்று கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன், உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுவருவதாகக் கிழக்கு ஜெர்மனி மீதும் அப்பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

### ஜப்பானுக்கு இந்தியப் பிரதமர்.

புதுடில்லி, ஜூலை 26

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி செப்டம்பர் மாதம் 28ந் திகதி தொடக்கம் நவம்பர் 2ந்திகதி வரை ஜப்பானில் உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொள்வாரென அறிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் அவர் நான்கு நாட்கள் தங்குவார்.

### புராதன நூல்கள்

லண்டன், ஜூலை 26

உஸ்பெக் ஆராய்ச்சியாளர் ஒருவர் தனது பாரிஸ், லண்டன் விஜயங்களின்போது 40 விசேஷ கையெழுத்து புராதன நூல்களின் நிழற்படப் பிரதிகளைச் சேகரித்துள்ளார். பிரிட்டிஷ் மியூஸியத்தில் நவோய் எழுதிய பேர்ஸியக் கவிதைகளின் நிழற்படப் பிரதிகள் பெறப்பட்டன. இவை 16 ம் நூற்றாண்டுக் காலத்தவையாகும்.

### வவுனியாவில் கலைவிழா

வவுனியா, வெள்ளி

வவுனியா நெடுங்குளம் சி. சி. பாடசாலையில் எதிர்வரும் 28-ந் திகதி பெற்றோர்— ஆசிரியர் சங்கத்தினர் கலைவிழா ஒன்றை நடாத்த இருக்கின்றனர். பிரதம விருந்தினராக வவுனியா கல்வி அதிகாரி திரு. சந்திரசேகரம்பிள்ளை கலந்துகொள்ளவிருக்கிறார்.

### சத்தம் செய்யாத புடவைத் தறிகள்

மாஸ்கோ, ஜூலை 26

சத்தம் செய்யாத புடவைத் தறிகளை உருவாக்குவது பற்றி சோவியத் வடிவமைப்பாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர். யந்திரங்களின் இரைச்சலைக் குறைப்பதுபற்றிய பிரச்னையை நூல் மண்ட் புடவை உற்பத்தி யந்திர வடிவமைப்பு நிலையமும் இதர விஞ்ஞான பொறியியல் ஸ்தாபனங்களும் ஆராய்ந்து வருகின்றன. சோவியத் புடவை உற்பத்தி நிலையங்களில் நிபுணர்களின் சிபார்சுகளின் பேரில் சில அசையும் யந்திரங்களுக்கு இரைச்சலில்லா வாகனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. நெசவு ஆலைகளிலிருந்த தகரப் பீப்பாக்களின் இடத்தில், பிளாஸ்டிக்கிலான உபகரணங்கள் இடம்பெற்றுள்ளன. இரைச்சல் ஏதுமின்றி இயங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட 40 தறிகள் ருஷ்ய சமஷ்டியிலுள்ள ஒரு ஆலையில் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன,

### நீரில் மூழ்கி மரணம்

சுழிபுரம், வெள்ளி

திருவடிநிலை கடற்கரையில் நேற்று முன்தினம் பிற்பகல் நீராடிக் கொண்டு நின்ற தெற்குப்புரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முருகேசு என்பவர் திடீர் என மரணமானார். இவருடன் நீராடச் சென்ற மூவரும் உடனடியாக கரைக்கு கொண்டு வந்து முதலுதவிகள் செய்த பின்னர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

சங்கானைப் பொலிசாரிடம் செய்து கொண்ட முறைப்பாட்டையடுத்து மரணவிசாரணை அதிகாரி என். சேனாதிராசா மரணவிசாரணை நடாத்தினார். பிரேத பரிசோதனை நடைபெற்று தண்ணீரில் மூழ்கியதால் மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

### யாழ்ப்பாணத்தில் கிளை

யாழ்ப்பாணம், சனி

லங்கா சோவியத் நட்புறவுச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று மாலை நல்லூர் மத்திய வாசிகசாலை மண்டபத்தில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். உடுவில் எம். பி திரு. வி. தர்மலிங்கம் கிளையை ஆரம்பித்துவைப்பார். [ஈ. நி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிலத்திலும் கடலிலும் தொழில்செய்ய முன்வாருங்கள்'

## புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வாலிபருக்கு அழைப்பு

ஊர்காவற்றுறை, வெள்ளி

"வெறும் காற்சட்டை போட்ட உத்தியோகத்தை நம்பி வாலிபர்கள் இருக்காமல் நிலத்திலும் கடலிலும் தொழில்செய்ய முன்வந்தால் எதிர்காலத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழமுடியும்"

ஊர்காவற்றுறை புனித ஜேம்ஸ் சன சமூக நிலைய வெள்ளிவிழா மேற்படி சன சமூக நிலைய தலைவர் எஸ். பி. லூசியஸ் தலைமையில் நடைபெற்றபோது ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண. பிதா ஸ்ரனிஸ்லோஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "1956-ம் ஆண்டு ஆட்சி மன்றத்தில் தனிச்சிங்கள மசோதா கொண்டுவரப்பட்டது. சிங்கள மக்கள் சிங்கள மொழிமீது வைத்த பற்றினால் என்று கூறமுடியாது தமிழ்மக்கள் இலங்கை அரசாங்கத்தின் சகல துறைகளிலும் பொறுப்புள்ள உத்தியோகமும், உயர் பதவிகளும் வகித்ததினால் அவர்களை அப்பதவிக்குத் தகுதியற்றவர்களாக்கவும். இனிமேல் தமிழர்கள் உத்தியோகம் பெறமுடியாமல் தடுக்கவுமே தனிச்சிங்கள மொழி மசோதா கொண்டுவரப்பட்டது. 1956-ம் ஆண்டுக்குப்பின்னர் சிங்கள மக்களுக்கென பல பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இரு சமூகங்களுக்கிடையிலும் எவ்வாறு பொருளாதாரப் போட்டி ஏற்பட்டுவிட்டது என்பதை அறியலாம்.

எந்தக்காலத்திலுமில்லாதவாறு தமிழ்மக்களின் உத்தியோகங்களை பறித்துவிட, சிங்களத் தேர்ச்சி தேவை என்று அரசாங்கம் கூறிவருகிறது. தமிழ் மக்கள் தமது நிலையை உணர்ந்து உழைப்பதற்கான ஒருகாலம் வந்துகொண்டிருக்கிறது என்று கூறினார்.

---

### 'மற்று, வரவை நிலைநிறுத்துவாராம்'

யாழ்ப்பாணம், சனி

[illegible]ல்லிப்பகுதி வணிகத்துறை டைரக்டர் திரு. வை. எ டி. எஸ் சமரத்துங்கா யாழ் கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்துக்கு விஜயம்செய்த போது, வணிகமன்றத்தைச் சேர்ந்த ஐவர் கொண்ட குழுவொன்று அவரைச் சந்தித்தது. வணிகர்கள் 'பற்று' வரவு என்ற சொற்களை நிலைத்து நிற்கவேண்டும் என்ற கோரிக்கையை டைரக்டர் ஏற்றுக்கொண்டு அவை நிலைநிறுத்தவேனவும், வெகு விரைவில் கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்தில் 'டிப்பிளோமா' போதனையினத்தை ஆரம்பிப்பதற்கு தீவிர நடவடிக்கையெடுப்பதாகவும் கூறினார். [ந.நி]

---

### இ. மு. சங்க கோரிக்கை

உடுப்பிட்டி, வெள்ளி

வருங்கால இளைஞருக்குச் சிங்களம் அவசியம் என்ற நிலை தவிர்க்க முடியாததாகி விட்டதால் வடபகுதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் சிங்கள ஆசிரியர்களை அனுப்புமாறு அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும்மென காரணவாய் வடக்கு இ. மு. சங்க விசேஷக் கூட்டத்தில் பேசிய திரு. சி. க. சேந்தன் கூறினார். கூட்டம் திரு. [illegible] தலைமையில் நடைபெற்றது.

---

### இளம் விவசாயிகள் கழக ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகத்தினதும் மாதர் முன்னேற்றச் சங்கத்தினதும் ஆண்டுவிழா இம்மாதம் 29-ம் திகதி திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. சமூகசேவைப் பகுதி உதவி அதிபர் திரு. எஸ். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு அரசாங்க அதிபர் திரு. வேணன் அ. ஜ. சேகரா பிரதம விருந்தினராகக்கலந்துகொள்கின்றார். மாவட்ட விவசாய அதிபர் திரு. எஸ். ஜெ. சீலன், பிரயோக போஷணைத்திட்டப் பொறுப்பதிகாரி திரு. எஸ் வீரசிங்கம் உட்பட பலர் இங்கு சொற்பொழிவாற்றுவார்கள். [வா. நி]

---

### யாழ். தாதிகள் விடுதியில் திருட்டு

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் தாதிமார் விடுதியிலிருந்து தாதிகளுக்குச் சொந்தமான சேலைகள் சட்டைகள் டயறிகள் ஆகியவற்றைத் திருடியதாக சந்தேகத்தின் பேரில் திருநெல்வேலியைச் சேர்ந்த சிவலோகநாதன் என்பவரை யாழ்ப்பாணம் பொலிசார் கைதுசெய்து காவலில்வைத்துள்ளனர்.

இத் திருட்டு நேற்றிரவு இடம்பெற்றதாகவும் பொலிஸ் கோஷ்டியினர் ரோந்து சுற்றிவிட்டுவருகையில் மேற்படி நபர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்து கொண்டதைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டபோதே திருடப்பட்டதாகக் கூறப்படும் பொருள்கள் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

---

### பீடித் தொழிலாளர் கஷ்டம்

புத்தளம், வெள்ளி

புத்தளம் பகுதி பீடித் தொழிலாளர் தொழிலின்றிக் கஷ்டமடைந்துள்ளனர். நூற்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட பீடித் தொழிலாளர் சங்கம் நாளொன்றுக்கு ஒருவருக்கு ஒன்றரை ருத்தல் பீடி இலை வழங்குமாறு கேட்டிருந்தது எனினும், குடிசைக் கைத்தொழில் அமைச்சு குறிப்பிட்ட ஒரு தொகை இலையைக் கொடுத்து மிகுதி பின்னர் வழங்குவதாக உறுதியளித்திருந்தது. ஆனால் மிகுதி இன்னும் கொடுக்கப்படவில்லை. இதனால் தொழிலின்றி பீடித் தொழிலாளர் கஷ்டப்படுகின்றனர்.

---

### பதவி உயர்வு

சுழிபுரம், செவ்வாய்

யாழ்ப்பாணக் கல்லூரி உதவி ஆசிரியரான திரு உ. ந. தேவகடாட்சம் யாழ்ப்பாண மாவட்ட சாரண ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்

0 0 0

மூதூர், வெள்ளி

எட்டியாந்தோட்டை புனித மேரி தமிழ் வித்தியாலயத்தில் நான்கு வருடங்களுக்கு மேலாக தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியதிரு. சி. ஆறுமுகம் பதவி உயர்வுடன் மூதூர் செங்கலடி மகாவித்தியாலய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 27—7—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர் காலை 6-30 தாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை-சுவாமி ஓங்காரநந்தா, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை— ஈ. மாணிக்கநாதன், 6-45 பதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-10 இசைவேளை, 8-15 இல்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் அல் 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 இளைஞர் மன்றம்.

இரவு 6-15 கோட்டு வாத்தியம், 6-45 மாவலம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முனைவிழ நிகழ்ச்சி, 9-30 பாட்டு—பரமேஸ்வரி விஜயரத்தினம், 9-45 நேயர்விருப்பம்.

---

### இன்றைய பலன்

(27 - 7 - 68)

ஆடி மீ 12 உ

சனிக்கிழமை

திதி- துதியை மாலை 6-22 மேல் திருதியை.

நட்சத்திரம் — ஆயிலியம், பகல் 9-27 மேல் மகம்.

ராகுகாலம் - 9-02—10-32.

எமநேரம் - 3-02—4-32.

இன்று பிறந்தவர்களுக்கு — பேச்சுவன்மையால் பெரும் புகழ் குவியும். கடிதத்தொடர்புகள் பெருகும். எழுத்தாளர்களுக்குச் சிறப்பான காலம். ஓவியர்கள் போற்றப்படுவர். குடும்ப விவகாரங்களின் சுமூகமான நிலை நிலவும். இனசன பந்துக்களின் கொண்டாட்டங்கள் ஏற்படும், வாகனம் செலுத்துவோர் அதிக நிதானத்துடன் இருக்கவேண்டும். பொதுவாக அபாயகரமான காரியங்களைத் தவிர்த்தல் நன்று. உதவிசெய்யப் போய் உபத்திரவத்தையும் தேடிக்கொள்ளலாம்.

மேஷம்- செல்வாக்கின் உச்சம், பெரியோர் மதிப்பு.

ரிஷபம்- இடமாற்றம் ஏற்படின் நன்மாற்றமாகும்.

மிதுனம்- புத்திரர் புகழ், புதுமையில் நாட்டம்.

கடகம்- பொருள் விரயம், பொல்லாங்கு கேட்டல்.

சிம்மம்- அடி சறுக்கும். ஆணவத்தை அடக்கு.

கன்னி- சொற்சிறப்பு, சௌகரியமான வாழ்வு.

துலாம்- தடைகள் தாக்கும், தாமதமிகுதி.

விருச்சிகம்- நல்ல முடிவு நன்மைகள் சேரும்.

தனுசு- இன்பம் பொங்கும், இனசன மகிழ்ச்சி

மகரம்: பகைமூட்டம், பதட்டத்தைத் தவிர்.

கும்பம்- இல்லம் இன்றது கட்டி வெல்லம்.

மீனம்- சிநேகிதர் பகை சிந்தையில் குழப்பம்.

[illegible]

---

# செய்திச் சுருக்கம்

### புதிய பதுளை மேயர்

பதுளை மாநகர சபையின் புதிய மேயராக திரு. தயா. குணசேகரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

### வாழும் இலக்கியம்

"சங்கப் புலவர்களைப் போன்று சொல்வளம் மிக்க இலக்கியங்களைப் படைப்பதன் மூலம் தாம் வாழும் இலக்கியத்தை சிருஷ்டிக்க முடியும்." என பண்டிதர் சபாபதி மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றதமிழ்விழாவில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

### கடும் தண்டனை

தபால் தந்தி பகுதிக்குச் சொந்தமான செப்புக் கம்பிகளைக் களவாடிய போது லயோல வின்சன் மரிஞரந்து. டொன் டேவிட் இருவருக்கும் நீர்கொழும்பு நீதவான் திரு. டக்ளஸ் விஜயரத்ன ஆறுமாதம் கடுங்காவல் தண்டனைவிதித்தார்.

### பீடிஇலை மூட்டைகள்

முள்ளிக்குளம் ஓலைத்தொடுவாய் கடற்கரையில் பெருந்தொகையான பீடி இலை மூட்டைகள் ரோந்து சுற்றிய ராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டு சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

### விசேட வசதி

கதிர்காம உற்சவத்திற்கு வரும் யாத்திரீகர் நலனைக் கருதி மாத்தறை ஸ்டேசன் வீதியில் தற்காலிக பஸ் தரிப்பு நிலையமும் விசேட இ. போ. ச. காரியாலயமும் திறக்கப்பட்டிருக்கின்றன.

ஃ ஃ ஃ

### அணைகட்டு நடவடிக்கை

பொலநறுவைப் பகுதியிலுள்ள தெவரக்லைபாற்றில் 30000 ரூபா செலவில் அணைகட்ட பொலநறுவை மாகாண அதிபர் நடவடிக்கைமேற்கொண்டுள்ளார்.

---

## 'விஞ்ஞான போதனைக்கு ஏற்றதாக தமிழ் அமைக்கப்படவேண்டும்'

### உப சபாநாயகர் யோசனை

உடுப்பிட்டி, வெள்ளி

"தாய்மொழியில் விஞ்ஞானக்கல்வி போதிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது, ஆங்கிலம் மூலமே விஞ்ஞானக்கல்வி பெறமுடியும் என எண்ணுவது தவறு. ஆங்கிலமொழி விஞ்ஞானத்திற்காக ஆக்கப்படவில்லை. ஆனால் காலகட்டத்தில் ஆங்கிலம் விஞ்ஞானக் கல்விக்குரிய ஒரு மொழியாக மாற்றப்பட்டுவிட்டது. அதைப்போலவே தமிழ் மொழியும் விஞ்ஞானக் கல்வி போதிப்பதற்குரிய மொழியாக அமைக்கப்படவேண்டும். தமிழினம் நல்ல எதிர்காலம் பெற இதுவே வழிவகுக்கும்."

மேற்கண்டவாறு உப சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விஞ்ஞானக் கழகத்தின் "சிந்தனை" ஆண்டுமலர் வெளியீட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார். செல்வன் சிவராசா விழாவிற்குத் தலைமைவகித்தார்.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"விஞ்ஞானக் கல்வி எவருக்கும் உரிமையானதல்ல விஞ்ஞான மாணவர்கள் கலையிலும் ஈடுபடவேண்டும். கலை, விஞ்ஞானம் இரண்டின் மூலமே மனித இனம் சுபீட்சம்பெறும். 2-ம் உலக மகாயுத்தத்தின் பின்னர் மிகவும் பின்தங்கிய நாடுகளாக இருந்த மேற்கு ஜர்மனியும், ஜப்பானும் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளன. விஞ்ஞானம் தொழில்துறையில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வமே முன்னேற்றத்திற்குக் காரணம். விஞ்ஞானக் கல்வியும், தொழில்நுட்பக் கல்வியும் சிறுபாடசாலைகளிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும்".

பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. கே. சிவநாதன் நூலை வெளியிட்டுவைத்துப் பேசுகையில் புத்தகப்படிப்பு மட்டும்போதாது ஆராய்ச்சித்திறனும் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தினார். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. வி. கந்தசாமி பேசுகையில் மூடநம்பிக்கைகளைப் புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் சமுதாயத்திலிருந்து அகற்றவேண்டியது நமது பெரும் பொறுப்பு என்று குறிப்பிட்டார்.

வடபகுதி விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் திரு. எம். அற்புதநாதன் விஞ்ஞானக் கல்வி பற்றி விளக்கிப் பேசினார்.

---

### நிர்வாகிகள்

பூநகரி, சனி

பூநகரி கரியாலிகாரி பிரிவு சனசமூக நிலைய—கிராம முன்னேற்றச் சங்க கருத்தரங்கு மகாநாடு அண்மையில் நடைபெற்றபோது கிராம முன்னேற்றச் சங்க சமாசம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பூநகரி கரியாலிகாரியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமை தாங்கினார்.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- வை. வல்லிபுரம் உபதலைவர்- அ. சுப்பையா, தலைவி- திருமதி ந. சரஸ்வதி, காரியதரிசி- சி சதாசிவம், பொருளாளர்- திரு. த. பரமசாமி.

---


### சிலை

விற்பனையாகின்றது! ஜூலை இதழ்!

மூவர்ணப் படங்கள் - சினிமா நட்சத்திரங்களின் பதில்கள் - அறிஞர்களின் கட்டுரைகள் யாவும் அடங்கிய கலைப் பொக்கிசம்.

இந்தியாப் பத்திரிகைகள் இலங்கையை அடைந்தும் விலையில் 50% கூட்டப்படும் இவ்வேளையில், நியாய விலையில் கிடைக்கும் இதழ்

சிலை ஒன்றே!

விலையை ஒப்பிட்டுப் பாருங்கள்.

யாழ்ப்பாண ஏஜன்ட்:

அன்பு புத்தகசாலை,

27 D, பெரியகடை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

அரசாங்க சேவையில் கல்விப் பகுதி

எல் 2000-மா/பலா வி ஆசிரியர் கலாசாலையில் சமையல் அறையும், சாப்பாட்டுச் சாலையும் அமைத்தல். சேவையின் முடிவு திகதி 25-8-68.

இதன் முழுவிபரங்களுக்கும் 26-7-68 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும்.

G P 6718

## குடத்தனைக் கிராமசபையின் கேள்வி விளம்பரம்

குடத்தனைக் கிராமசபை தலைவரால் நாகர்கோவில் எழுதுமட்டுவாள் றோட்டு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 14-8-68ம் திகதி காலை 10-00 மணிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப் பணம் ரூபா 25/-ம் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் 12-8-68ம் திகதி பகல் 12-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

வேறு விபரங்கள் கந்தோர் நேரங்களில் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

வ. துரையப்பா,
தலைவர்.
குடத்தனைக் கிராமசபை.

இ: ச. கந்தோர்,
குடத்தனை,
26-7-68.

மென்பந்து போட்டி

# பரந்தன் ரசாயன கோஷ்டி சாம்பியனாகியது

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி மென்பந்து விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வந்த மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில், பரந்தன் இரசாயன தொழிற்சாலைக் கோஷ்டியும், பரந்தன் விளையாட்டுக் கழகமும் கலந்து கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பரந்தன் விளையாட்டுக் கழகக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 20 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பரந்தன் இரசாயன கோஷ்டியினர் தமது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 41 ஓட்டங்களைப் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் பரந்தன் விளையாட்டுக் கழகம் மொத்தம் 63 ஓட்டங்களைப் பெற்றது. அதன் பின் துடுப்பெடுத்தாடிய பரந்தன் இரசாயன கோஷ்டியினர், 3 ஓட்டங்களை பெற்ற போது 3 விக்கெட்டுகளை இழந்து விட்டனர். அதன் பின் மிகத் திறமையாக துடுப்பெடுத்தாடிய வெள்ளைடிற்றும், சண்முகலிங்கமும் ஆட்டமிழக்காது முறையே 20, 20 ஓட்டங்களைப் பெற்றனர். இரசாயனக் கோஷ்டியின் பந்தெறி வீரர் சிவலிங்கம் இரு ஆட்டத்திலும் 12 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். ஆட்ட முடிவில், இரசாயனக் கோஷ்டியினர், பரந்தன் விளையாட்டுக் கோஷ்டியை 7 விக்கெட்டுகளால் தோற்கடித்து, 'சாம்பியன்' வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றினர். [தே. நி]

### 2-வது ஆண்டு விளையாட்டுவிழா

காங்கேசன்துறை, வெள்ளி

வலிகாமம் வடக்கு காங்கேசன்துறைப் பகுதி 2-வது ஆண்டு விளையாட்டு விழா அடுத்த மாதம் 1-ம் திகதி ஆரம்பமாகி 30-ம் திகதி முடிவடையவுள்ளது. காங்கேசன்துறைப் பட்டினசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் அவ்விளையாட்டுப் போட்டியில் இப்பகுதியிலுள்ள கிராமசேவையாளர் பகுதி, சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 28-ம் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ளன.

## இளங்கோ விழா

வெள்ளவத்தை, வெள்ளி

கொழும்பு இந்து கனிஷ்ட வாடசாலை மாணவர்களால் வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் இளங்கோவடிகளின் நினைவு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவிகளின் நடன நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

## வல்வெட்டித்துறையில் இ. தி. மு. க. கிளை

உடுப்பிட்டி, வெள்ளி

இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளையொன்று வல்வெட்டித்துறையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. கழகத்தின் பொது செயலாளர் திரு. ஏ. டபிள்யூ. தேவராஜன், அமைப்புக்குழுச் செயலாளர் திரு. பூ. ஆ. விசாகரத்தினம் ஆகியோர் இ. தி. மு. கவின் கொள்கைகள் குறித்து விளக்கிப் பேசினர். புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கா. கந்தசாமி [கந்தன்னு] உப தலைவர்: திரு. க. நகுலசிகாமணி, இணைச்செயலாளர்கள் திருவாளர்கள் ச. சுந்தரேசன், பா. குமன், பொருளாளர்: திரு. ஆ. சிதம்பரம் பகவான். 6 பேரைக் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### அம்புலன்ஸ் இல்லை

வவுனியா, சனி

வவுனியா அரசினர் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டியில்லாமலிருப்பதால் அவசர நோயாளிகள் பலர் மிகவும் கஷ்டப் படுகின்றார்கள். முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வண்டியே இங்கு சேவைக்கு வரவேண்டியுள்ளதாம்.

## இடமாற்றம்

கிளிநொச்சி, சனி

கடந்த இரு ஆண்டுகளாக கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் உதவி அதிபராகக் கடமையாற்றிய திரு. எம். காராளபிள்ளை அடுத்த மாதம் முதல் இராமநாதபுரம் வடக்கு அரசினர் மகாவித்தியாலயத்திற்கு அதிபராகப் பதவி உயர்வுடன் மாற்றப்பட்டுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்

## அவுஸ்திரேலியா 5—258

லண்டன், ஜூலை 25

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும், அவுஸ்திரேலியாக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே இங்கிலாந்தில் நடைபெறும் 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதலாவது நாளான இன்று அவுஸ்திரேலியா 5 விக்கெட்டுகளை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலியா கோஷ்டியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரெட்பாத் 92 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

## வரி விளம்பரம்

### கல்வி

கணக்குப் பதிவியல், கணக்கியல், புள்ளிவிபரஇயல், தொழில் பொருளாதாரவியல், பொது பொருளாதாரம், வர்த்தக நிர்வாகம் & செயல்முறை & வர்த்தக தொடர்பு - இப்பாடங்களில் கல்வி போதிக்கப்படும். வெற்றி நிச்சயம். திரு டி. கிருஷ்ணன், B Com. A M. B I M. [London] P C. B. A. [Glasgow]. ஜெர்மன் பாஷையில் தகுதித் தேர்வுப்பத்திரம் பெற்றவர். [BONN] நேரடியாகத் தொடர்பு கொள்க. No. 9 றெக்கா றோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1268

### சோதிடம்

வீடு, கிணறு திசை பார்க்க ஜாதகம் பார்க்க கணிக்க குறிப்பெழுதச் சோதிடக்கலையில் நாற்பது வருட அனுபவம் வாய்ந்தவர். தொடர்பு கொள்ளவும். இ. க. இராமலிங்கம், சோதிடர், தூதாவளை, கரணவாய் தெற்கு, கரவெட்டி. 1269

### தேவை

தையிட்டி ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராகவும் வயது 25 தொடக்கம் 40க்கு உட்பட்டவராகவும், குறைந்தபட்சம் 8-ம் வகுப்பு சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். பிணை ரொக்கம் ரூபா 1000/-, ஆதனம் ரூபா 2000/-. வேதனம் ரூபா 100/-. [சகல படிகளும் உட்பட] விண்ணப்ப முடிவு திகதி 10-8-68. வ. தர்மராசா, காரியதரிசி, தையிட்டி ப. நோ. கூ. ச. காங்கேசன்துறை. 1270

## விவசாயி பெறும் நிறைவு

புன்னாலைக்கட்டுவன், செவ்.

"ஓர் உத்தியோகத்தன் பெறும் சம்பளத்திலும் பார்க்க அதிக வருமானத்தை ஒரு கமத்தொழிலாளி பெறமுடிகிறது. ஒரு விவசாயி தனது வாழ்வில் அடையும் மனநிறைவை ஓர் அரசாங்க உத்தியோகத்தன் அடையமுடிவதில்லை" என வலி. கிழக்கு கமத்தொழில் போதனாசிரியர் திரு. எஸ். ஆலாலசுந்தரம் ஊரெழு பாரதி இளைஞர் விவசாய, வீட்டுப்பணிப் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசிய போது கூறினர்.

வீட்டுத்தோட்டம், காய்கறி வகை, வீட்டுப்பணி, மண்ணியல் நீரியல் போன்ற அநேக பிரிவுகளின் கீழ் நடைபெற்ற இவ் விவசாயப் பொருட்காட்சியில் அதிக புள்ளிகளைப் பெற்ற செல்வன் த. தயாபரன், செல்வன் சு. பாலச்சந்திரன், செல்விகள் இராஜேஸ்வரி தம்பையா, பிரசில்லி குரே, திருமதி தேவிசுந்தரம் ஆகியோர் முறையே விவசாயமன்னர், விவசாய இராணிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.


மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி: 6-30 9-30
விடுமுறைதினங்களில் 2 30
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நடித்த
குமரிப்பெண்

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

மகிழ்ச்சிகரமான
2வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்
காலை 10-30 மணி
ரகுநாதன்
சந்திரகலா
தங்கவடிவேல்
நடித்த
நிர்மலா
எஸ்.ரி ஆர் பிலிமின்
வெளியீடு.

29-ந் திகதி வரை
MANOHARA
JAFFNA
Daily at 2-30, 6-30,
10-00 p m.
Rajendra Kumar &
Sathana
in
ARZOO
[Hindi]
[Eastman color]
ஆர்ஸூ [ஹிந்தி]
Music:- Shanker,
Jeikashian.

REGAL JAFFNA
Daily at
... 9-45 P M
John Wayne &
Rita Hayworth
in
Circus World

வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — பி. சரோஜாதேவி
பி. எஸ். வீரப்பா, ஜெயலலிதா, நாகேஷ்
ஆகியோர் நடித்த
அரசகட்டளை

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா மைலன்
விஜயா (மட்டுநகர்) ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
மனோரமா-நாகேஷ்-முத்துராமன்
பேபி பத்மினி-மனோகர்
நடித்த
ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ்
நான்

கிங்ஸ்லி
(கொழும்பு)
3.00, மாலை 6 00, 9.30.
★ ஜெமினி கணேசன்
★ சரோஜாதேவி
★ தங்கவேலு
நடித்த
கல்யாணப்பரிசு

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.
★ ஜெய்சங்கர்
★ எல். விஜயலக்ஷ்மி
★ மனோகர்
நடித்த
வல்லவன் ஒருவன்

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
★ சீன ஜோர்ஜட் சேலைகள்
கவர்ச்சிகரமான வேலைப்பாடுகள் கொண்டது
ரூபா 37-50
★ பிளெய்ன் டெட்ரோன் சேலைகள்
6 அழகான வர்ணங்களில்
ரூபா 39-50
★ வொயில் சேலைகள்
வர்ண பட்டிக் டிசைன்களுடன்
ரூபா 21-50
டயஜூர்ஸ்
54, மெயின் வீதி, — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'எலிபண்ட் ஹவுஸ்' ஸ்தாபனத்தார் நடத்திய ஓவியப் போட்டிக்கு வந்த ஓவியங்களை நீதிபதிகள் பரிசீலனை செய்கிருர்கள். இடமிருந்து வலம் திரு. எம். வெம்முல்ல [உள்நாட்டமைச்சுப் பிரதிநிதி] திரு. ஸ்டான்லி அபயசிங்க [அரசாங்க நுண்கலைக் கல்லூரி அதிபர்] திரு. பெர்னுட் டி சில்வா [அரசாங்க அச்சகர்] திரு. ஜோன் இராசையா [மனேஜிங் டைரக்டர் சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்] திரு. ரெஜி சந்தப்பா [கிராண்ட் அட்வடைஸிங் மனேஜிங் டைரக்டர்.]

# ஆங்கிலம் அவசியம் என்கிருர் அமைச்சர்

காலி, வெள்ளி

"ஆங்கிலம் உலக மொழி, விஞ்ஞானத்தில் நல்ல வளர்ச்சி பெறுவதற்கு ஆங்கிலம் அவசியம். ஆங்கிலத்திலிருக்கும் நல்ல அரிய நூல்களை நாம் மொழி பெயர்ப்பதாக இருந்தால் பல வருடங்களாக இருக்கும். பல்கலைக்கழகத்தில் உள்ள கலைப்பிரிவு மாணவர்களுக்குங்கூட ஆங்கில மொழியில் தேர்ச்சிபெறுவது நல்லது."

இவ்வாறு கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல காலியில் சவுத்லாண்ட்ஸ் கல்லூரியில் ஆங்கில அறிவை ஊக்குவிக்குமுகமாக நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறிஞர்.

திரு. இரியகொல்ல மேலும் பேசுகையில், சிங்கள மொழி உலகின் சிறந்த மொழிகளில் ஒன்ருகஇருந்த போதிலும், சிங்கள மக்கள் மட்டுமே இம்மொழியைப் பேசுவதாகவும், ஆங்கிலம் தொலைகயான மக்களால் பேசப்படுவதாகவும், ஆங்கிலத்தைப் படிப்பதால் ஆங்கிலத்துக்கு அடிமையாகிவிடுவது நோக்கமாக இருக்கவில்லையென்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சிபெறுவதால் அதிக பலன்பெறலாமென்றும் கூறிஞர்.

டாக்டர் ஜி. பி மலலசேகரா பேசுகையில், ரஷ்யர்கள்கூட ஆங்கிலத்தை விரும்பிக் கற்கிருர்களென்றும் சிங்கள தமிழ் மாணவர்கள் ஆங்கிலத்தைக் கற்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

உதவி மாவித்தியாதிபதி திரு. டி. எம். ஹெட்டியாராச்சி, ஆங்கிலப் பிரிவுப் கல்வி அதிகாரி திரு. எஸ். பி. ஜெயசூரியா உட்பட வேறு பலரும் பேசினர்.

# மயிலிட்டி, மானிப்பாய் தெல்லிப்பழை கி.ச. தலைவர்கள்

குரும்பசிட்டி, வெள்ளி

மயிலிட்டி கிராமசபைத் தலைவராக திருவடிவேலு கிருஷ்ணசாமி தெரிவுசெய்யப்பட்டார்.

இவரது பெயரை திரு வி. செல்லத்துரை பிரேரித்தார். திரு. ஏ. தர்மலிங்கம் அனுமதித்தார். திரு. சிதம்பர செல்லையா உதவித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு.கே. மகாலிங்கம் இவரது பெயரை பிரேரிக்க திரு. தி. தம்பையா அனுமதித்தார். 13 அங்கத்தவர்களைக்கொண்ட இச்சபையில் 12 அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தனர். தலைவர் தெரிவுக்கு முன்னர் ஓர் அங்கத்தவர் ஒழுங்குப் பிரச்சினையொன்றைக் கிளப்பினுர். கூட்டத்துக்கு தலைமைவகித்த உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். முருகவேல் அதை நிராகரித்ததும் அந்த அங்கத்தவர் வெளிநடப்புச் செய்தார். இதன்பின்னர் தலைவரும், உபதலைவரும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

## தெல்லிப்பழை கி. ச. தலைவர்

தெல்லிப்பழைக் கிராம சபையின் தலைவர், உபதலைவர் தெரிவு உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. எஸ். முருகவேல் தலைமையில் இன்று முற்பகல் நடைபெற்றது.

தலைவராக திரு. எம். சிதம்பரநாதன் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவராக திரு. எஸ். பொன்னையா தெரிவுசெய்யப்பட்டார். 19 அங்கத்தவர்களைக்கொண்ட இக்கிராமசபையின் இன்றைய கூட்டத்துக்கு 15 அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தனர். கூட்ட ஆரம்பத்தில் ஓர் அங்கத்தவர் கிளப்பிய ஒழுங்குப்பிரச்சினை நிராகரிக்கப்பட்டதும் அவர் வெளிநடப்புச்செய்தார்.

## மானிப்பாய் கி. ச. தலைவர்

மானிப்பாய் கிராம சபைத் தலைவர், உபதலைவர் தெரிவு இன்று முற்பகல் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேல் தலைமையில் [illegible] திரு. [illegible] தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## முல்லைத்தீவு குடும்பத் தலைவர்கள் கஷ்டம்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவிலுள்ள பல குடும்பங்களில் தகப்பன், தாயின் கூப்பன் தனிப்பட்ட உத்தரவு பெற்ற வியாபாரியின் கடைக்கும், பிள்ளைகளின் கூப்பன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைக்கும், கணவனின் கூப்பன் ப. நோ. கூ. ச. கடையிலும், மனைவியின் கூப்பன் தனிப்பட்ட உத்தரவுபெற்ற வியாபாரியின் கடையிலுமாக வழங்கப்பட்டுள்ளன.

இதுபற்றி விசாரித்தபோது உணவுக்கட்டுப்பாட்டதிகாரியின் சுற்றுநிருபத்தின்படியே செய்யப்படுவதாகக் கூறுகிருர்கள. குடும்ப தலைவர் தன்னுடைய கூப்பன் எந்தக் கடையிலுண்டோ அந்தக்கடைக்கே பிள்ளைகளினதும், மனைவியினதும் கூப்பன்களை மாற்றிக்கொடுங்கள் என்ருல் மறுக்கப்படுவதாகத் தெரிகிறது. இதுபற்றி பலர் உணவு விவசாய அமைச்சருடன் தொடர்புகொண்டு ஆவன செய்துவருகின்றனர்.

## மாதர் சங்கத் தலைவி கோரிக்கை

பூநகரி, வெள்ளி

பூநகரி மகாவித்தியாலயத்தில் இருகிணறுகளிலிருந்தும் பிரஸ்தாப வித்தியாலய மாணவர் தமது தண்ணீர் தேவைக்கு அரைமைல் தூரம் செல்லவேண்டியிருப்பதாகவும் இக்குறைபாட்டை நீக்க ஆவன செய்யவேண்டுமென்றும் பூநகரி காரியாதிகாரி காரியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் மட்டுவில்நாடு மாதர்சங்க தலைவி திருமதி ந. சரஸ்வதி கருத்தரங்கிற்குத் தலைமைவகித்த யாழ் மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினத்திடம் கேட்டுக்கொண்டார்.

பூநகரி மகாவித்தியாலயத்திலுள்ள இரு கிணறுகளில் ஒன்று உப்புநீரென்பதும், மற்றதில் கோடைகாலத்தில் நீர் கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நல்ல ஏற்பாடு

பருத்தித்துறை, வெள்ளி

அரசாங்கம் இலவசமாகக் கொடுக்கும் ஒரு கொத்து அரிசியில் ஒரு பகுதியை விரும்புபவர்கள் அதற்கென ஒரு பெட்டியில் போட்டு வைக்கும் வசதி தெல்லிப்பழை ஐக்கிய பண்டகசாலையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வரிசி மந்திகை அரசினர் வைத்தியசாலையிலுள்ள நோயாளருக்குத் தானமாக வழங்கப்படும்.

## சத்தியாக்கிரகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுவது சகஜமாகிவிட்டது. மாவை ஆலயப் பிரவேசத் தோல்விக்கு இதுவே காரணம். ஆதலால் சமிடம் எமக்கு உறுதுணையாக வருமளவரை பாகுபாடு காட்டும் ஆலயங்களை பகிஷ்கரிக்க வேண்டும். வடபகுதியில் 20 க்கும் மேற்பட்ட உயர் ஆலயங்கள் இதுவரை சட்டமோ சத்தியாக்கிரகமோ இன்றிச் சைவப் பெரியார்களால் திறந்துவிடப் பட்டுள்ளன. திறந்த ஆலயங்களில் தான் ஆண்டவன் இருக்கிருன், அருள் கொடுக்கிருன். திறவாத ஆலயங்களுள் ஆண்டவனில்லை.

பகல் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேல் தலைமையில் [illegible] மீண்டும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

# யாழ். விளையாட்டரங்கு விஸ்தரிப்பு வேலை

## விரைவில் ஆரம்பிக்க முடிவு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கை விஸ்தரித்து புனரமைப்பதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

விளையாட்டரங்கு குழுவினரும், மாநகரசபை அதிகாரிகளும் நேற்றுமுன்தினம் விளையாட்டுப்பகுதி டைரக்டர் டாக்டர் எச். எஸ். ஆர். குணவர்த்தனவுடன் விளையாட்டு அரங்கு புனரமைப்பு பற்றி ஆலோசனைசெய்தனர்.

விளையாட்டரங்கிற்கு எதிர்ப்புறத்திலுள்ள 'கிளப்' காணியையும் இடையேயுள்ள காங்கேசன்துறை வீதியையும் எடுத்து விளையாட்டரங்கை விஸ்தரிப்பதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அரங்கை விஸ்தரித்து புனரமைப்புச் செய்வதற்கு நான்குலட்ச ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் கையிலுள்ள ஒரு லட்ச ரூபாயுடன் விரைவில் இதற்கான வேலைகளைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தப்பட்ட அபிப்பிராயங்களை சகல விளையாட்டு சங்கங்களிடமிருந்தும் தொடர்பான இலாகாக்களிடமிருந்தும் பெறப்படவிருக்கின்றன.

இத்திட்டத்திற்கான சம்மதம் அமைச்சரிடமிருந்து விரைவில் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. — [ந. நி]

## இன்று தேர்த்திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தேர்த் திருவிழா வாகிய இன்று பகல் 11 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் நண்பகல் 12-15 மணிக்கு ரதாரோகணமும் பிற்பகல் 2 மணிமுதல் 3 மணிவரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியர் குழுவினரின் பக்திப் பாடல்களும் மாலை 3மணி முதல் 5 மணி வரை விசேஷ மேளக்கச்சேரியும் மாலை 5 மணிக்கு ரதாஅவரோகணமும் நிகழும்.

## புதிய அராலி கிராமசபை

யாழ்ப்பாணம், சனி

புதிதாக நிறுவப்பட்டுள்ள அராலி கிராமசபை 1969 ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி முதல் இயங்கும். இதற்கான அறிவித்தலை உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளார்.

13 வட்டாரங்களைக் கொண்ட இப்புதிய கிராமசபையின் வட்டார விபரங்கள் நாளை முதல் வெளிவரும்.

## இவருக்கு ஆறுதல் பரிசு

யாழ்ப்பாணம், சனி

வவனியா விவசாய விஸ்தரிப்பு சேவையாளரான திரு. பொ. கனகநாயகத்துக்கு இந்த மாதம் இழுக்கப்பட்ட ஜாதிக சம்பத் சீட்டிழுப்பில் ஆறுதல் பரிசான ரூபா 809-00 கிடைத்துள்ளது.

## கால் நடைகள் அவதி

பூநகரி, வெள்ளி

இப்பகுதியில் மழை இல்லாததால் கடும்வரட்சி நிலவுகிறது குளம் குட்டைகள் எல்லாம் வற்றிவிட்டதனால் கால் நடைகள் குடிப்பதற்கு நீரின்றி அலைகின்றன.

## பயல் திருட்டு

பூநகரி, வெள்ளி

பூநகரிப் பகுதியில் நீர்ப்பாசனப் பகுதி ஓவசியர்களாகக் கடமையாற்றுபவர்கள் கூட்டமாக இருக்கும் அறைப்பூட்டுடைக்கப்பட்டு அவர்களது உடைகளும் பொருட்களும் களவாடப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக அப்பகுதி கிராமசேவையாளரிடம் முறையிடப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்ட பொருள்களை கொண்டு சென்ருராம்

அளவெட்டி, சனி

தொண்டமானூற்றிலிருந்து காங்கேசன்துறைக்கு சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒருவர் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டிலிருந்து கடத்திவரப்பட்டதாகக்கூறப்படும் 20 சாரம், 6 சேலைகள் ஆகியவற்றைக் கொண்டுசெல்கையில் வழியில் கைதுசெய்யப்பட்டார்.

இது சம்பந்தமாக காங்கேசன்துறை சுங்கப்பகுதியினர் விசாரணை செய்து வருகின்றனர்.

## சுட்டுக் கொலை சடலம் தெருவில் கிடந்தது

காரைதீவு, வெள்ளி

சம்மாந்துறையைச் சேர்ந்த காரைதீவு வாசியான சண்முகம் அருணாசலம் துப்பாக்கியால் சுட்டுக் கொலைப்பட்டார். இவரது சடலம் தெருவில் கிடந்தது.

காரைதீவின் மூன்றும் குறிச்சியில் பிணம் ஒன்று கிடப்பதாகப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து சென்றனர். அங்கு சண்முகம் அருணாசலம்தான் கொலையுண்டு கிடந்தவர் என அடையாளம் காணப்பட்டது.

பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## சுவீப் முடிவுகள்

நேற்று வெளியான தேசிய லொத்தர்சபையின் 204வது சீட்டிழுப்பு முடிவுகளில் ஆறுதல் பரிசுபெறும் டிக்கட்டுகளில்

22 D 0943, 31 E 0577, 12 Y 0278 என்பவையே சரியான முடிவுகள்

0 H 0745 என்றிருப்பது தற்செயலாக 06 H 0745 என்றிருக்கவேண்டும்.

## மரண அறிவித்தல்

### பாவுலுப்பிள்ளை

நேசம்மாவின் அருமைக் கணவரும், இளையதம்பி செபமாலையின் பெருமகனும், ஆரித்தம்மா, திரேசம்மா, மரியம்மா, பாக்கியம், அடைக்கலம், தேவராசா, அந்தனிஸ், இரட்டினசோதி ஆகியோரின் சகோதரருமான S.K. பாவுலுப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக (20, புதுரோட் மட்டக்களப்பு) இல்லத்திலிருந்து இன்று பி.ப. 4 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும். 1587

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு [illegible] பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org